www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

Kanchipuram Dt

# காலாண்டுப் பொதுத் தேர்வு – 2024

## பதினொன்றாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி பொருளியல் மதிப்பெண்கள்:90

### பகுதி – அ

20x1=20

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சமநிலை விலை என்பது அந்த விலையில் ______
   அ) எல்லாம் விற்கப்படுகிறது
   ஆ) வாங்குபவர்கள் பணத்தை செலவிடுகின்றனர்
   இ) தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்
   ஈ) மிகைத்தேவை பூஜ்யம்
2. பொருளாதாரத்தின் தந்தை யார்?
   அ) மாக்ஸ் முல்லர் ஆ) ஆடம்ஸ்மித் இ) கார்ல் மார்க்ஸ் ஈ) பால் அ சாமுவேல்சன்
3. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர் ______
   அ) ஜே.ஆர். ஹிக்ஸ் ஆ) ஆர்.ஜி.டி. ஆலன் இ) மார்ஷல் ஈ) ஸ்டிக்லர்
4. தகுவிலை ரூ.250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ.200 ஆகவும் உள்ளது. நுகர்வோர் எச்சத்தைக் காண்க.
   அ) 375 ஆ) 175 இ) 200 ஈ) 50
5. சமநோக்கு வளைகோடுகள் ______
   அ) செங்குத்து கோடுகள் ஆ) படுக்கை கோடுகள்
   இ) நேர்மறை சரிவுடையது ஈ) எதிர்மறை சரிவுடையது
6. முதன்மை உற்பத்திக் காரணிகளாவன ______
   அ) உழைப்பு மற்றும் தொழிலமைப்பு ஆ) உழைப்பு மற்றும் மூலதனம்
   இ) நிலம் மற்றும் மூலதனம் ஈ) நிலம் மற்றும் உழைப்பு
7. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு
   அ) எதிர்மறை ஆ) நேர்மறை இ) பூஜ்யம் ஈ) அதிகரிக்கும்
8. செலவுச்சார்புகளை ______ சார்புகள் எனலாம்.
   அ) உற்பத்தி ஆ) முதலீடு இ) தேவை ஈ) நுகர்வு
9. ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு ______
   அ) மாறும் செலவு ஆ) மாறாச் செலவு
   இ) இறுதி நிலைச் செலவு ஈ) மொத்தச் செலவு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. ஒரு புத்தகம் ரூ.10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார். எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்

அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400

11. விலையின் மற்றொரு பெயர் ______

அ) சராசரி வருவாய் ஆ) இறுதிநிலை வருவாய்

இ) மொத்த வருவாய் ஈ) சராசரி செலவு

12. விற்பனை செலவிற்கு உதாரணம்

அ) கச்சாப்பொருள் விலை ஆ) போக்குவரத்துச் செலவு

இ) விளம்பர செலவு ஈ) கொள்முதல் செலவு

13. உழைப்பாளருக்கான வெகுமதி ______

அ) வாரம் ஆ) கூலி இ) இலாபம் ஈ) வட்டி

14. போலி வாரம் இதனால் தோன்றுகிறது ______

அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள் ஆ) வீட்டில் தயார் செய்தவை

இ) இறக்குமதிப் பொருட்கள் ஈ) எதுவுமில்லை

15. கலப்பு பொருளாதாரம் என்பது ______

அ) தனியார் துறை மற்றும் வங்கிகள்

ஆ) பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது

இ) பொதுத்துறை மற்றும் வங்கிகள்

ஈ) பொதுத்துறைகள் மட்டும்

16. ஜனநாயக சமதர்மத்தைக் கொண்டு வந்தவர்

அ) ஜவஹர்லால் நேரு ஆ) P.C. மஹலனோபிஸ்

இ) டாக்டர். இராஜேந்திர பிரசாத் ஈ) இந்திராகாந்தி

17. திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் குறிப்பாகக் கூறுவது

அ) செல்வம் ஆ) வறுமை சமுதாயத்தின் சாபம்

இ) வேளாண்மை ஈ) மேற்காண் அனைத்தும்

18. இரயத் வாரி முறை முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம்

அ) கேரளா ஆ) வங்காளம் இ) தமிழ்நாடு ஈ) மகாராஷ்டிரா

19. திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு

அ) 1950 ஆ) 1955 இ) 1960 ஈ) 1952

20. பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம்

அ) விரைவான மற்றும் அதிகமான ஒருங்கிணைந்த வளர்ச்சி

ஆ) சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி

இ) சோசலிச முறையிலான சமூகம்

ஈ) விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – ஆ

**II ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்**

**வினா எண் – 30 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **7x2=14**

21. நுண்பொருளியல் என்றால் என்ன?
22. விருப்பங்களை வகைப்படுத்துக.
23. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
24. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்து.
25. வருவாயை வரையறு.
26. அங்காடி – வரையறு.
27. பகிர்வின் வகைகள் யாவை?
28. வாரம் – வரையறு.
29. புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் வளங்களை தருக.
30. போலி வாரம் – வரையறு.

## பகுதி – இ

**III ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்**

**வினா எண் – 40 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்** **7x3=21**

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. நுகர்வோர் எச்சம் என்ற கருத்தை வரைபடத்துடன் விளக்குக.
33. தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக.
34. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
35. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
36. அங்காடியின் இயல்புகள் யாவை?
37. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
38. கிராம சர்வோதயம் – சிறு குறிப்பு வரைக.
39. வணிக வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.
40. PQLI என்றால் என்ன?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பகுதி – ஈ

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 7x5=35

41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

*(அல்லது)*

ஆ) பொருளியலின் தன்மை மற்றும் எல்லையை விவரி.

42. அ) தேவை விதி மற்றும் அதன் விதி விலக்குகளை விவரி.

*(அல்லது)*

ஆ) குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டு விதியை வரைபடத்துடன், விவரி.

43. அ) விகித அளவு விளைவு விதையை உதாரணத்துடன் விளக்குக.

*(அல்லது)*

ஆ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.

44. அ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கிடையேயான தொடர்பை விளக்குக.

*(அல்லது)*

ஆ) நிறைவுப் போட்டியின் இயல்புகள் விளக்குக.

45. அ) முற்றுரிமையில் விலையும், உற்பத்தி அளவும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்குக.

*(அல்லது)*

ஆ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.

46. அ) கீன்சின் வட்டிக் கோட்பாட்டை விவரி.

*(அல்லது)*

ஆ) இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.

47. அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துக்களை சுருக்கமாக எழுதுக.

*(அல்லது)*

ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

***/***

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com